TIT-BITS OF ANIMAL LIFE

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் XII.] **FEBRUARY, 1912-ஞ பெப்ருவரிமீ.** [இலக்கம் 1.

புதிய வருஷத்து மங்கல வாழ்த்து.

இப்புதிய வருஷாரம்பத்தில் இப்பத்திரிகையைப் படிப்பவ ரெல்லோருக்கும் ஜீவகாருண்யத்துடன் மற்றெல்லாச் சற்குண சம்பத்துகளும் உண்டாக வேண்டுமென்றும், அவர்களுடைய சிறு மக்கட்கேயன்றிச் சகல ஜனங்களுக்கும் ஜீவராசிகளிடம் அன்பு பாராட்டுதலென்னும் சன்மார்க்கத்தை அவர்கள் நன்றாய்ப் போதிக்க வேண்டுமென்றும், அவர்களாலும் அவர்களுடைய பந்துஜன இஷ்ட மித்திரர்களாலும் இச்சங்கத்துக் காரியங்களுக் குபகாரமாய்ப் பொருளுதவி முதலியவை மிகுதியாய்க் கிடைக்கும்படி யவர்கள் முயல்வாராகவென்றும் ஆதிமூலக் கடவுளை வணங்கிப் பிரார்த்திக்கின்றோம்.

நாட்டுப்புறத்து வீடுகளில் காட்டுப் பறவைகள்.

நகரத்து வீடுகளில் வளர்க்கப்படுகிற பிராணிகள் அநேகமாய் நாய், பூனை, சிற்சில விடங்களில் இரண்டொரு பறவையினங்கள் தவிர வேறில்லை. நாட்டுப்புறங்களிலப்படி யில்லை. அங்கே பல காரணங்களினால் பிராணிகள் மனிதர்களின் பாதுகாப்பின்கீழ் வருவதற்கு ஆஸ்பதமுண்டு. நாட்டுப்புறத்தில் வயற்புறமாய்ப் போகையில் ஓர் ஊர்க்குருவியின் சிறகுகளுக்கு ஏதோ பழுதுண்டாகி அது அவஸ்தைப்படுவது காணப்படும். அது அந்த ஸ்திதியிலிருக்கையில் பூனையின் கண்ணுக்குத் தென்பட்டால் அன்றே அதன் ஆயுள் மாளுமென்பதற்குச் சந்தேகமே யில்லை. ஆகையால் அதை வீட்டுக்குக் கொண்டுபோய், சிலநாள் கூட்டில் அடைத்து அதன் நோய் நீங்கின பிறகு மறுபடியு மதை வெளியே விட்டுவிட்டால் அது எவ்வளவு புண்ணியமான காரியமாகும். இதன்றி, சில சிறுவர்கள் மைனாக்குருவி, ஆந்தை முதலிய பறவைகளைப் பிடித்து விளையாட்டுத்தனமாய் அவைகளுக்கு ஹிம்சை யுண்டுபண்ணுவதுண்டு. சில காருண்ய சீலர்கள் அப்படிப்பட்ட பிள்ளைகளிடத்திலிருந்து அப்பறவைகள் தமக்கு வேண்டியதுபோல் விலைக்கு வாங்கிச் சிலநாள் வைத்திருந்து, பிறகு அவைகளைச் சுயேச்சையாய்த் திரியும்படி விட்டுவிடுவதுண்டு.

வயல்களிலும் மரமடர்ந்த விடங்களிலும் தம் மிஷ்டம்போல் வசிக்கிற அப்பியாசமுள்ள மிருகங்களையும் பக்ஷிகளையும் வளர்ப்பது சாதாரணமாய் வீடுகளிலேயே வளருகிற செல்வப் பிராணிகளை வளர்ப்பதைக் காட்டிலும் அதிக கஷ்டமான காரியம்தான். எந்தப் பிராணியையும் சிறிது காலத்திற்காயின் சௌக்கியமாய் வைத்திருப்பதற்கு முடியும். மிகவுஞ் சிறியவையாயிருக்கிற பிராணிகளை வளர்க்கும்படி நேரிட்டால் அவை தாமாகவே சஞ்சரிக்கக்கூடிய பருவம் வருகிறவரையில் அவைகளைப் பத்திரமாய் வளர்க்கும் பொருட்டு வெகுநாள் வரையில் கூட்டி லடைத்துவைப்பதில் பலவித கஷ்டங்க ளுண்டாகின்றன. முதலாவது அப்படிப்பட்ட பிராணிகள் அதிக திகிலடைந்து தீனியைத் தின்னவுந் தோன்றாமல் இருந்து விடுகின்றன. அப்பொழுது அவை

களுக் கொருவித ஆறுத லுண்டாகிறபரியந்
தம் பட்டினியாகவே யிருக்கின்றன. ஆகை
யா லவைகளைப் பயமுறுத்தும்படியான சப்
தங்களுண்டாகிறதற்கு இடமில்லாத ஏகாந்த
மான ஸ்தலங்களில் வைத்திருப்ப தவசியம்.
அவைகளின் கூடுகளுக் கருகே செல்லும்
போது அமைதியுடன் செல்வதோடுகூட
நம்மிடத்தில் அவைகளுக்கு விசுவாச முண்
டாகும்படி நடந்துகொள்ளவேண்டும்.

மற்றொருவிதமான கஷ்டம் அப்படிப்
பட்ட சிறு பிராணிகளை ஊட்டுகிற விஷயம்.
சில பிராணிகளுக்குத் தாமே தீனியைத்
தின்னத் தெரிகிறதில்லை. அதைக் கண்
டறிந்து அவைகளை வளர்க்கிறவர்கள் அவைக
ளுடைய தாய்ப் பிராணிகளைப்போல் அவை
களின் வாயண்டை தீனியைக் கொண்டு
போய்க் கொடுக்கவேண்டும். இதை யெழு
திய மிஸ்டர் லியோனார்ட் பாஸ்டின் என்
பவர் ஒருதடவை குருவிக்காரர்களிடத்தி
லிருந்து ஒரு சிறிய ஆந்தையை வாங்கினார்.
அவர் அதை யொரு கூட்டில் விட்டு அதன்
பக்கத்தில் கொஞ்சம் இறைச்சியையும் வைத்
துச் சென்றார். பிறகு மறுநாள் அவரதைப்
போய்ப் பார்த்தபொழுது அவ்விறைச்சி
தொடப்படவே யில்லை. அது தானே தீனி
யைத் தின்னச் சக்தியற்றதா யிருக்குமென்று
நினைத்து அவ்விறைச்சியை யொருசிறுகொம்
பின் நுனியில் குத்திக் குத்தி யதன் வாயண்
டை கொண்டுபோய்க் கொடுக்க அதிக ஆவ
லுடன் தின்றது. ஆந்தைகளை அதிகநாள்
வைத்துக்கொண்டிருப்பது கூடாது. ஏனென்
றால் அவைகளுக் கடிக்கடி மூஞ்சூறு முத
லிய உரோமத்துடன் கூடிய பிராணிகளி னி
றைச்சி தேவையாயிருக்கிறது. அவ்வாறான
உணவுகளைத் தின்பது அதற்குச் சுபாவமா
யிருந்தபோதிலும் அதை வளர்க்கிறவர்களு
க்கு மூஞ்சூறுகளையும் எலிகளையுங் கொல்வ
தற்கு மனம் வராதல்லவா. சிலவேளைகளில்
அவைகளி னதிர்ஷ்ட வசமாய்ப் பூனைகளா
லடித்துக் கொண்டுபோகப்படுகிற எலியோ
மூஞ்சூறோ தவறிக் கீழே விழுந்துகிடந்
தால் அப்படிப்பட்ட ஆகாரங் கிடைப்பது
முண்டு.

இன்னொருவிதமான கஷ்டம் நாம் வளர்க்
கிற பிராணிகளின் ஆகாரத்தினுடைய அள
வைப் பற்றியது. பலர் தம்முடைய சம்ரக்ஷ
ணைக்குட்பட்ட பிராணிகளை யளவுக்குமிஞ்சி
போஷித்து அதனால் அவைகளைப் பாதுகாப்
பதை விட்டு அவைகளுக்குக் கெடுதி விளைக்
கிறார்கள். சாதாரணமாய் எந்தப் பிராணி
யும் அதைத் தொடும்பொழுதெல்லாம் வா
யைப் பிளப்பது வழக்கம். அதனாலேயே
அவைகளுக்குப் பசியாயிருக்குமென் றெ
ண்ணி வாயைத் திறக்கும்போதெல்லாம்
உணவு கொடுக்கக்கூடாது. எதேச்சையாய்த்
திரிகிற பிராணிகளுக்குச் சதாகாலமும்
வேண்டியவளவு ஆகாரங் கிடைத்துக்கொண்
டேயிராது. அதனால் அவைகளின் தேக
சௌக்கியத்திற்கு யாதொரு குறைவும் வரு
கிறதில்லை. ஆதலால் வீடுகளில் வளர்க்கப்
படுகிற பிராணிகளை மிகுதியாய்ப் போஷிக்
காமல் அவைகளை யெப்பொழுதுஞ் சிறி
தளவாகிலும் பசியுடன் வைத்திருந்தா லவை
களுக்கு நன்மையாயிருக்கும். அவ்வாறு
கூறுவது கொஞ்சம் வியப்பாகவும் அதிக
கடினமாகவும் இருப்பதாகக் காணப்பட்ட
போதிலும் அதுதான் உண்மை. இதை யெழு
தினவரால் வளர்க்கப்பட்டுவந்த பிராணி
களிலெல்லாம் மிகவும் நேர்த்தியாயிருந்த
ஒரு சிறிய முட்பன்றி அளவுக்கு மிஞ்சி
ரொட்டியையும் பாலையும் உண்டதினால் அ
கால மரணமடைந்தது. அந்த வுணவு அத
ற்கு நூதனமாயிருக்கவே விலாப்புடைக்கத்
தின்று அக்கதி யடைந்தது.

இதை யெழுதினவர் ஒரு சமயம் ஒரு
வௌவாலைச் சிலநாள் போஷிக்கும்படி நேரி
ட்டதாம். ஒருநாள் ஒரு வீட்டின் தலைக்
கடையில் ஒரு வௌவா லசைவற்றுக் கிடந்
ததைக் கண்ணுற்றார். அது மேலேயிருந்து
கீழே விழுந்ததினாலோ அல்லது வேறெந்தக்
காரணத்தினாலோ அப்படி யிருந்தது. ஆயி
னும் அது உயிரோடிருப்பதை யறிந்து அவர்
அதைத் தன் வீட்டுக் கெடுத்துக்கொண்டு
போய்ச் சிலநாள் வைத்திருந்து அதற்கு
மறுபடியும் பறக்கச் சக்தி வந்தவுட னதை
விட்டுவிட்டார். பட்சமாய் நடத்தினால்
வௌவாலை வெகு சீக்கிரத்தில் பழக்கிவிட
லாம். கில்பர்ட் வொயிட் என்னும் துரை
யவர்கள் தாமெழுதிய (Natural History)
தாவர சங்கம சாஸ்திரப் புஸ்தகத்தில் பின்
வருமாறு கூறுகின்றார்: — "ஒருதடவை
கோடைகாலத்தில் நான் ஒரு வௌவா
லுடன் பொழுதுபோக்கி வந்தேன். அது
என் கையின்மேல் வந்துட்காருகிற ஈக்களைப்

பிடிக்கும். அதற்கேதாவது தின்னக்கொடுத்தால் அதன் சிறகுகளை வாய்க்கு நேராகச் சேர்த்துத் தலையை மறைத்துக்கொண்டு உண்ணும். அது ஈக்களைத் தின்னும்பொழுது அவ்வீக்களின்சிறகுகளைக் கத்தரித்தெறிவதிலதற்குள்ள சாமர்த்தியம் வியக்கத்தக்கது. வௌவால் சாதாரணமாய்ச் சிறு பூச்சிகளையும் புழுக்களையும் விருப்பத்துடன் தின்னும். எப்பொழுதாவது சிறிது இறைச்சித்துண்டைக் கொடுத்தா லதையு மது தள்ளுகிறதில்லை. அதனால், வௌவால்கள் புகைக் கூண்டின் வழியாய்ச் சமையலறைக்குள்ளிறங்கி அங்கே வைத்திருக்கும்படியான பன்றியிறைச்சி வற்றலைக் கடித்துப்போகின்றனவென்று விநோதமாய்ச் சொல்லப்படுகிற கதை நம்பக்கூடாததாக வெனக்குத் தோன்றவில்லை.”

இதன்றி ஓரோர் சமயங்களில் வயல்களில் வசிக்கிற சுண்டெலி யினங்களி லேதாவதொரு பிராணியை வளர்க்க நேரிடுவதுமுண்டு. அவை புலங்களில் பயிரிருக்கையில் அங்கங்கே சிறு கூடுகள் கட்டிக்கொண்டிருக்கும். அவையெல்லாம் அறுப்பறுத்தவுடன் வெளிப்படையாய்த் தெரியும். அவை பார்ப்பதற்கு மிகவும் நேர்த்தியாயிருக்கும். குடியானவர்க ளறுப்பறுக்கும்பொழுது அச்கூடுகளைச் சிறிதுந் தயையில்லாம லெடுத் தெறிவது முண்டு. அக்கூடுகளி லப்பொழுது அகஸ்மாத்தாயேதாவதெலிகளிருந்தாலவைகளைக் கொண்டுபோய் வளர்க்கலாம். அச் சுண்டெலிகள் பார்ப்பதற்கு மிகவும் அழகாயிருப்பதோடு அவைகளை வளர்ப்பது அதிக சுலபம். அவை அதிக சந்தோஷமாயிருந்து கொண்டு குட்டிக ளீனுவது முண்டு. அவை குட்டிகளாயிருக்கையில் பாலையும் ரொட்டியையுங் கொடுக்கலாம். வளர்ந்தவை எல்லாவித தானியங்களையுந் தின்னும். சில பூனைகள் ஒவ்வொரு சமயங்களில் மூஞ்சூறுகளைப் பிடித் தவைகளைக் கொல்லாமல் விட்டுவிடுவ துண்டு. அப்படி விடப்பட்ட மூஞ்சூறுகளுக்கு ஏதாவது காயமுண்டாயிருந்தால் அவைகளைச் சிலநாள் கூட்டில் விட்டு வளர்த்துவந்தால் அவை சீக்கிரம் சௌக்கியமடையும்.

எந்தப் பிராணியை வளர்த்தாலும் அவை இரவில் குளிரினால் அவஸ்தைப்படாமல் அவைகளுக்குத் தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும். பக்ஷிகள் அவைகளின் கூடுகளிலும் மிருகங்கள் அவைகளின் குகைகளிலும் வளைகளிலும் குளிருக்கு எவ்வளவு அடக்கமாய் வசிக்கின்றன வென்பது அநேகருக்குத் தெரியாது. கம்பளித் துண்டுகளினாலாவது கம்பளி கலந்த வஸ்திரங்களினாலாவது படுக்கை செய்து கூடுகளின் ஓர் மூலையில் போட்டு வைக்கவேண்டும். அந்த மாதிரி ஏற்பாடொன்று மில்லாமற்போனால் அவை குளிரினா லிறந்துபோகவும் நேரிடும். ஆகையால் இந்த விஷயத்தைப்பற்றி ஜந்துக்களை வளர்க்கிறவர்க ளெல்லாரும் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது யாதெனில், நாம் வளர்க்கிற பிராணிகளின் இயற்கையான வுணவைப்பற்றி நல்ல புஸ்தகங்களைப் படித்தறிந்துகொண்டு கூடியவளவில் அவைகளி னியற்கை சுபாவத்துக்கு மாறுபடாதபடி அவைகளைப் போஷிக்கவேண்டுமென்பதே. சில மிருகங்களும் பக்ஷிகளும் எதைக் கொடுத்தாலுந் தின்கிற சுபாவ முடையனவாயிருக்கின்றன. சில அவைகளுக்கு வழக்கப்பட்ட பதார்த்தங்கள் தவிர வேறெதையுந் தொடுகிறதில்லை. ஜந்துக்களின் ஆகார விஷயத்தைப்பற்றி நாட்டுப்புற வாசிகளுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கு மென்பது பாவனையே யொழியப் பெரும்பாலும் அவர்களுடைய அபிப்பிராயங்கள் தப்பாகவே யிருக்கின்றன.

பிராணிகளுக்குச் சிகிச்சை செய்ய முடியாத வியாதிகள் கண்டாலும், ஆற்ற முடியாத காயங்கள் உண்டானாலும் அவைகளின் உயிரை யுடனே போக்கிவிடுவது நலமென்பார் சிலர். அவ்வாறு கொல்வது இரக்கமற்ற காரியமேயானாலும் அதனா லப்பிராணிகளினுடைய தீர்க்கமான ஹிம்சை நிவாரணமாகுமல்லவா? சிறிய வியாதிகளும் சொல்பமான காயங்களும் நாளாவட்டத்தில் ஸ்வாபாவீகமாகவே நீங்கிவிடும். ஆயினு மப்படிப்பட்ட சமயங்களில் அப்பிராணிகள் தாமே உணவைத் தேடி யுண்பதற்கு முடியாதிருந்தால், பசியினா லிறந்துபோகாம லிருக்கும்பொருட்டு அப்படிப்பட்ட ஜந்துக்க ளெங்காவது காணப்பட்டா லவைகளைக் கொண்டுபோயவைகளின் தேகஸ்திதி கூடிவருகிறவரையில் அவைகளை வளர்த்தால் அது ஜீவகாருண்யமுள்ள காரியங்களி லொன்றாகும்.

என் ஜன்னலண்டை வரும் சீமைக் குருவிகள்.

தோட்டத்தின் புறமாயுள்ள என்னுடைய அறையின் ஜன்னலுக்கு அநேகவிதமான பறவைகள் வருவது வழக்கம். அவைகளெல்லாவற்றிலும் சாப்பின்ச் (Chaffinch) என்கிற ஒரு ஜாதிக் குருவிகளின்மேல் தான் எனக்கு அதிகப் பிரியம். அவ்வினத்தில் பதினறு குருவிகள் என் வீட்டுக்கு வருகின்றன. அவைகளி லொவ்வொன்றினடையாளமு மெனக்கு நன்றாய்த் தெரியும். அவை உருவத்திலும் குணத்திலும் ஒன்றுக்கொன்று பேதமுள்ளவையா யிருக்கின்றன. அவைகளுக்குத் தனித்தனி பெயரிட்டிருக்கிறேன். அவை பறக்கும்பொழுது கூட அவைகளின் அடையாளத்தைக் கண்டு கொள்வேன். அதைப் பார்த்து என் நண்பர்கள் வியப்படைவார்கள்.

மாரிகாலத்தில் டாம்டிட்ஸ் (Tom-tits) என்கிற இன்னெரு ஜாதிக் குருவிகள் விசேஷமாய் வரும். அப்பொழுது சாப்பின்ச் குருவிகள் அவ்வளவாக வருவதில்லை. அவை கோடைகாலத்தில்தான் நாள்முழுதும் வந்து போய்க்கொண்டே யிருக்கும். கோடைகாலத்தில் மற்றப் பறவைகள் வெளியே ஏராளமாய்க் கிடைக்கிற உணவைக் கொண்டு திருப்தியடைகின்றன போலும். சாப்பின்சுகளுக்கும் அவ்வாறே வெளியில் மிகுதியான தீனி அகப்பட்டபோதிலும் அவைகளுக்கு நான் கொடுக்கிற வாதுமை முதலிய பருப்புத் தினுசுகளில் எவ்வளவு தின்றபோதிலும் சலிப் புண்டாகிறதில்லை. அவை தின்பதோடு அந்த பருப்புகளைப் பொடியாக்கிக் கொடுத்தால் தாய்ப்பறவைகள் அதைக் கொண்டுபோய் அவைகளின் குஞ்சுக்கு ஊட்டுகின்றன. தாய்ப்பக்ஷிகள் குஞ்சுகளுக்காக ஆகாரந்தேடி வரும்பொழுது என்னுடைய ஜன்னலில் வைத்திருக்கிற பெட்டியில் ஒன்றுங் காணப்படாமற் போனல் அவை சிறிதும் பயமின்றி ஜன்னலின் வழியாய் என் னறைக்குள் நுழைந்து என் மேஜையின்மேல் உட்கார்ந்து ஒரு வாதுமைப் பருப்பையுடைத்துக்கொடுக்கும் வரையில் அவ்விடத்தைவிட்டு நகர்வதில்லை. ஒருநாள் அன்றுதான் குஞ்சுபொரித்த ஒரு தாய்க்குருவி என்னுடைய முன்னங்கையிலுட்கார்ந்து அதன் குஞ்சுக்காகப் பருப்புத் துண்டுகளைத் தன் வாயி லடைத்துக்கொண்டிருந்தபோது மற்றெரு குருவி யங்கே வந்தது. நான் அதற்கும் அந்த துண்டுகளைக் கொடுக்க ஆரம்பித்தேன். அப்பொழுது அவ்விரண்டு மமைதியுடன் தீனியை யுட்கொண்டு போயின. ஜன்னலண்டை பெட்டியிலிருந் துண்ணும்போது அவையெல்லாங் கூவிக்கொண்டும் ஒன்ருேடொன்று சண்டையிட்டுக்கொண்டும் தின்பது வழக்கம். குஞ்சுகளுக்குப் பறக்கத் தெரிகிற வரையில் தாய்க்குருவிகள் விடியற்காலத்தில் நான்கு மணிக்கே என் ஜன்னலண்டை வரும். சீக்கிரத்தில் நான் கதவைத் திறக்காவிட்டால் அவை யெல்லாஞ் சேர்ந்து இரைச்சல் போடும். அவ்விரைச்சல் என்னைப் பலவாருகத் திட்டுகிற சப்தமே யொழிய வேறில்லை. சில தினங்களில் நானே அதிகாலையி லெழுந்து வெளியே வந்து அவைகளுக்காகக் காத்துக்கொண் டிருப்பேன். அப்பொழு தவை அவ்வாறு கெட்ட கூச்சல் போடாமல் என்னருகில் வந்து நேர்த்தியாய்ப் பாடத் தலைப்படும். எவ்வளவு பழகினபோதிலும் இக்குருவிகளுக்குச் சந்தேகமென்பத திகம். அவை நாள்தோறும் வருகிறவிடத்தில் ஏதாவது புது ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தால் அவ்விடத்திற்கு வரப் பயப்படுகின்றன. ஜன்னலில் ஒரு சிறு கயிற்றுத்துண்டைப் புதிதாய்க் கட்டி வைத்தா லவை யங்கே செல்லா. அவை வந்துட்காரும்பொருட்டுக் கட்டி வைக்கப்பட்டிருக்கிற கொம்புகளி லேதாவதொன்று புதிதாகக் காணப்பட்டால் அதன்மே லுட்காரா. முதல் முதல் அவைகளுக்குப் பெட்டியில் பாதம் முதலியவை போட்டு வைத்தபோது அப்பெட்டியிலிருந் தெடுத்துக்கொள்ளப் பயப்பட்டன. ஆனல் வெகு தைரியமாய் என் கையிலிருந் தெடுத் துண்டன. இந்தமாதிரி அக்குருவிகள் கண்ணுக் கேதாவது புதிதாகக் காணப்பட்டால் பயப்படுமேயொழிய எவ்வளவு சப்தம் செய்தாலுமவை பயப்படுகிறதில்லை. பல தடவைகளில் அவை ஜன்னலண்டை தீனி தின்றுகொண் டிருக்கும்பொழுது நான் வேகமா யறைக்குள் பிரவேசித்தாலும் கதவுகளைப் பலமாய் மூடினலும் அவை சிறிதும் கவ

னியாமல் தம்முடைய காரியத்திலேயே யழுந்தியிருப்பதைப் பார்த்திருக்கிறேன்.

என்னிடத்திற்கு வருகிற பக்ஷிகள் அவைகளுக்கு நான் காண்பிக்கிற பிரீதியினுல் அதி சீக்கிரத்தில் பழகிவிடுகின்றன. பல தாய்ப்பறவைகள் அவைகளின் குஞ்சுகளைக் கொண்டுவந்து என்னோடு சிநேகம் பண்ணி வைக்கின்றன. அக்குஞ்சுகள் முதலில் அச்சமுள்ளவையா யிருந்தபோதிலும் அவைகளின் தாய்களையும் மற்றப் பறவைகளையும் பார்த்துப் பார்த்துத் தைரியமடைந்து விடுகின்றன. சில சமயங்களில் சில துடுக்கான குஞ்சுகள் அவைகளே தைரியமாய் என்னருகில் வரும். அதைப் பார்ப்பதினுலும் மற்றவைகளுக்குத் தைரியமுண்டாவதுண்டு.

ஜனவரி முதற்கொண்டு மூன்று அல்லது நான்கு மாதம்வரையி லிக் குருவிகளின் கானத்தை விசேஷமாய்க் கேட்கலாம். மார்ச்சு மாதத்தில் சிறு பறவைகள் இரை தேடுகிற பருவம். ஆண்குருவிக ளக்காலத்தில் பாடுவது அதிக நேர்த்தியாயிருக்கும். பெட்டைகள் முட்டையிடுகிற பருவத்தில் முட்டையிடுவதற்கு முன் உணவு சேகரிக்கும்பொருட்டு ஒரு நாளுக்குள் அநேக முறை யென் வீட்டுக்கு வந்து பாடும். அப்பொழுது அவைகளின் தொனி பிச்சை கேட்கிற பாவனையா யிருக்கும். அது எப்படிப்பட்ட கல்நெஞ்சரா யிருந்தபோதிலுமவர்களின் மனதைக் கரையச்செய்யும். ஜூலை மாதத்தி னிறுதியில் குஞ்சுகளும் பறக்கச் சக்தியுள்ளன வாகும். அப்பொழுது பெரிய பறவைகள் குஞ்சுகள் எல்லாஞ் சேர்ந்து அங்கங்கே செழிப்பாய் வளர்ந்திருக்கிற தானியங்களைத் தின்னும்பொருட்டுப் போய்விடுவதுண்டு. ஆயினும் சீக்கிரத்திலேயே அவையெல்லாம் என்னுடைய தோட்டத்திற்குத் திரும்பி வந்து விடும். அவைகளிற் சில ஆண்குருவிகள் வேறெங்கேயாவது அவைகளுக்குச் சிநேகமான பெட்டைகளை யவைகளோ டழைத்து வருகிறது முண்டு. அவைகளுஞ் சீக்கிரத்திலேயே என்னோடு பழகிவிடும். இப்பொழுது என் தோட்டத்தில் இக்குருவிகள் முப்பது ஜதைக்குக் குறையாம லிருக்கின்றன. அவையெல்லாம் நானங்கே சென்று சீத்காரஞ் செய்தமாத்திரத்தில் வேலிகளிலிருந்தும் புதர்களிலிருந்தும் மரங்களிற் கட்டின கூடுகளிலிருந்தும் வெளிப்பட்டு என்னருகில் வரும்.

என்னைப்போலவே பறவைகளைத் தம்முடைய வீட்டுக் கழைக்க விரும்புகிறவர்கள் அவைகளைப் பழக்குவதற்கு மாரிகாலத்திலாரம்பிக்க வேண்டியது. அப்பொழுது அவைகளுக்கு வெளியிடங்களில் சுலபமாய்த் தீனி யகப்படாதாகையால் வீடுகளிலவைகளுக்கு இரை யளிப்பவர்களை யவைமறக்கவேமாட்டா. முதலில் இரண்டு மூன்று பறவைகளைப் பழக்கினுல் போதும். பிறகு அவைகளே யநேகம் பறவைகளைக் கொண்டுவரும். அவைகளுக்கு நாம் காட்ட வேண்டியதெல்லாம் தயைதவிர வேறு ஒன்றும் வேண்டியதில்லை. எந்தப் பிராணியையும் பயத்தினுல் நம்மை விரும்பும்படி செய்ய முடியாது. அன்பு என்கிற ஒரு குணந்தான் எல்லா ஜீவராசிகளையும் இணைப்பதற்குத் தகுந்த ஔஷதம். அமெரிக்கர்.

பிராமண ஸ்திரீயும், கீரியும்.

1. பிள்ளைப்பே றில்லாத
   பிராமண ஸ்திரீயொருத்தி
   தள்ளொணுக் கொழுநன்மனஞ்
   சார்ந்தொழுகிப் பன்னுளும்

2. தருமம் பலபுரிந்தாள்
   சத்திரங்கள் நிருமித்தாள்
   அரிய விரதங்கள்
   அத்தனையும் அநுசரித்தாள்.

3. ஆகுநா ளன்றியே
   யாகாதென் றெண்ணுளாய்ச்
   சோகமே மேலிட்டுச்
   சொல்லொணுத் துயருற்று

4. பிள்ளையெ னும்பெயர்க்கே
   பேராவ லாய்க்கீரிப்
   பிள்ளையொன்று வாங்கிப்
   பேணினுள் ஆர்வமுடன்.

5. நகுலந்தன் வீடுற்ற
   நற்காலப் பயனுலும்
   பகவான்றன் னருளாலும்
   பயந்தாள் ஒருமகவை.

6. மைந்தன் றனைப்பரிவாய்
   வளர்த்துவரு மோர்நாளில்
   சந்தனக் கட்டிலிலே
   தன்சிசுவைத் தாலாட்டி

7\. கண்வளர்ந்த பின்புஅவள்
காவலாய் நகுலத்தை
வண்மையுற வைத்தாங்கு
வாவிநீர் மொண்டுவர
8\. குடத்தை யிடைஎடுத்துக்
குளத்திற்குச் சென்றதன்பின்
படத்தை யுடையதொரு
பன்னகங் கீழிறங்கக்
9\. கண்டிவ் வராச்சிசுவைக்
கடிக்குமென் றக்கீரி
கண்டதுண்ட மாகவதைக்
கடித்துவிட்டுப் பார்ப்பனிக்குத்
10\. தெரிவிக்க வெண்ணித்
தெண்ணீர்க் கயந்தேடி
விரைவுடனே யோடி
மீள்வாளைக் கண்டதுவே.
11\. பார்த்திட்டாள் கீரியின்வாய்
பச்சைரத் தம்வடிய
வேர்த்திட்டாள் மேனி
விதிர்விதிர்த்து மனம்வாடி
12\. பிள்ளையையே கொன்றதெனப்
பேதுற்று நீர்க்குடத்தை
எள்ளொணுக் கீரியின்மேல்
எடுத்துடைத்துக் கொன்றனளே.
13\. விரைந்தோடி வந்துதன்
வீட்டில்பிள்ளை யைக்கண்டாள்
கரைந்தமனந் தேறியபின்
கண்டாள் பாம்புத்துண்டை
14\. ஐயையோ என்செய்தேன்!
அரும்பாவி கெட்டேனே!
செய்ய நகுலத்தைத்
தெரியாது கொன்றேனே!
15\. ஆத்திரக் காரனுக்கும்
ஆராயுங் குணமுண்டோ!
சாத்திர வார்த்தைக்குச்
சாட்சியா னேனேனே!
16\. என்று மனம்வாடி
யிதம்புரிந்த கீரிக்காக்
கன்றிக் கண்ணீர்விட்டுக்
கதறினள் காலமெலாம்.
17\. ஆதலினோர் காரியத்தை
யாராய்ந்து பாராதே
ஓதிடினுஞ் செய்திடினும்
ஊறுமிக வுண்டாமே.

பூச்சிகளின் பரிசுத்தம்.

மனிதர்களுடைய வாசஸ்தலங்களிலும் அவர்களுடைய சரீரத்திலும் பூச்சிகள் ஏதாவது காணப்பட்டால் அவை அசுத்தத்தின் மூலமாய் வந்ததாகச் சாதாரணமாய்ச் சொல்லப்படுகிறது. ஆனல் அந்தக் கிருமிகள் அசுத்தமுள்ளவையோ வென்று பார்த்தால் அவைகளின் பரிசுத்தத்தைப்பற்றிச் சந்தேகமேயில்லை. ஒரு அசுத்தமான எறும்பையாவது, ஈயையாவது, குளவியையாவது யாராகிலும் பார்த்த துண்டா? நான் ஆயிரக்கணக்கான எறும்புகளைப் பலவித சந்தர்ப்பங்களிலுங் கவனித்திருக்கிறேன். அதாவது அவை சுபாவமாயிருக்கிற விடங்களி லிருக்கையிலும் அசுத்தமான விடங்களி லிருக்கையிலும் பார்த்திருக்கிறேன். எந்த சந்தர்ப்பத்திலு மவைகளி லொன்றேனும் அசுத்தமாயிருந்ததைப் பார்த்ததில்லை. சிலவகைப் புழுக்கள் நிலத்தில் வளைகள் தோண்டி அவைகளில் வசிக்கிற இயல்புடையனவா யிருக்கின்றன. சிலவற்றிற்கு அழுக்கு ஒட்டக்கூடிய மீசைகள் இருக்கின்றன. அவையெல்லாம் குப்பைகளிலும் எருக்களிலும் ஊர்ந்து செல்கின்றன. ஆயினும் அவைகள் ஒருபோதும் அழுக்கு படிந்தனவாய்த் தெரியவில்லை. அவைகள் சுத்திசெய்து கொள்வதற்கு வேண்டிய கருவிகளையெல்லாம் கடவுள் அவைகளின் தேகத்திலேயே படைத்திருக்கிறார். எறும்புகள் அவைகளின் தேகத்தைச் சுத்திசெய்வதைப் பார்க்க அதிக வேடிக்கையா யிருக்கும். அவை கும்பலாய்ச் சேர்ந்து ஒன்றின் அழுக்கை மற்றொன்று நாவினல் துடைக்கும். அதேமாதிரி குளவிகளும் வண்டுகளும் எவ்வளவு அழுக்கான விடங்களில் சஞ்சரித்து வந்தாலும் நாள் வேலை முடிந்தவுடன் அழுக்கைப் போக்குகிற வேலையைத் தவருமல் கவனிக்கின்றன. இந்தப் பரிசுத்த குணம் பூச்சிகளுக் கியற்கையாகவே யமைந்திருக்கிறது. இதைப்பற்றியன்றோ "ஈயைப்போல் பரிசுத்தமா யிருக்க வேண்டும்" என்கிற பழமொழியும் உண்டாயிருக்கிறது.

ஐந்து சாஸ்திரி.

கன்றுகளை எப்படி வளர்க்கிறது?

பசுக்களும் மாடுகளும் நல்ல புஷ்டியுள்ளவைகளாய்ப் பார்க்க விரும்புவோர் அவைகள் கன்றுகளாயிருக்கும் பருவத்திலேயே ஜாக்கிரதையுடன் வளர்க்கவேண்டும். முக்கியமாய்க் கன்றுகளை ஈன்ற 4 அல்லது 5 மாதம் வரையில் அதிகமாய்க் கவனிக்கவேண்டும். கன்றுக்குட்டிகளை ஈன்றவுடன் நன்றாய்த் துடைத்துத் தாயின் பாலைக் கொஞ்சம் ஊட்டுவித்தபிறகு தாய்ப்பசுக்களைக் கட்டியிருக்கிற கொட்டகையிலேயே ஒரு மூலையில் விடவேண்டும். கன்றீன்றபிறகு சில நாள் வரைக்கும் பசுக்களின் பால் மற்றக் காலத்தி லிருப்பதுபோ லிராது. அப்பொழுது அது தண்ணீர் கலந்தாற்போல மென்மையா யிருந்துகொண்டு பேதி மருந்தின் தன்மை பொருந்தியிருக்கும். ஆகையினால் சிலநாள்வரையில் தாயின் பாலையே அடிக்கடி ஊட்டுவிக்க வேண்டும். எந்தக் காரணத்தினாலாவது கன்றுகளுக்குத் தாய்ப்பாலைக் குடிக்க முடியாதபட்சத்தில் கொஞ்சம் வெப்பமான நீரில் ஒரு கோழிமுட்டையையடித்துக் கொடுப்பதுடன் கொஞ்சம் சிற்றாமணக்கெண்ணெயும் நல்ல பசும்பாலையும் கொடுத்துக்கொண்டு வந்தால் கன்றுகளுக்கு மலச்சிக்குண்டாகாமலும் பலம் குறையாமலு மிருக்கும். கன்றுக்குட்டிகளுக்குப் பால்தான் சரியானவுணவு. அதை யளவுக்கு மிஞ்சிக் கொடுக்காமல் கன்றுகளின் வளர்ப்புக்குத் தக்கபடி சிறிது சிறிதாக அதிகரித்துக்கொண்டு வரவேண்டும். கன்றுகளுக்கு ஆறுமாதமானபிறகு கொஞ்சம் கெட்டியான ஆகாரத்தை யுண்பிக்கவேண்டும். முதலில் கொஞ்சம் வைக்கோலையும் நறுக்கின பிண்ணாக்குத் துண்டுகளையும் கொடுத்துப் பழக்கவேண்டும். பிறகு அவைகளைப் புல்லை மேயவும் விடலாம். கன்றுகளின் ஆகாரவிஷயத்தில்மட்டும் ஜாக்கிரதையாயிருப்பது போதாது. வெயிலுக்கும் மழைக்கும் அடைப்பான நல்ல கொட்டகையில் அவைகளைக் கட்டி வைக்கவேண்டும். அவைகளின் சாணம் கோநீர் முதலியவைகளை அடிக்கடி அப்புறப்படுத்திக் கொட்டகையைச் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும். சந்தைகளில் கால்நடைகளை விற்கக் கொண்டுவருகிறவர்கள் கன்றுக்குட்டிகளை இரவும் பகலும் வெளிகளில் கட்டிவைக்கிறார்கள். அதனால் கன்றுகள் இளைத்துப்போகுமென்பதையவர்கள் கவனிக்கிறதில்லை.

கன்றுகளுக்குச் சாதாரணமாய் வருகிற நோய்களைச் சிறிது ஜாக்கிரதையாயிருந்தால் சுலபமாய் விலக்கிவிடலாம். சிறு கன்றுகள் அதிகமாய்ப் பாலைக் குடிப்பதினாலாவது அல்லது கொட்டகையில் சாணம் முதலிய அசுத்தம் குவிந்திருப்பதினாலாவது ஒருவித பேதி காண்பதுண்டு. இது தொத்துவியாதி யாகையினால் நோயுற்ற கன்றை யுடனே வேறு இடத்தில் கட்டிவைத்து, கொட்டகையைச் சுத்தஞ்செய்யவேண்டும். இதற்குக் கர்ப்பூரக் கஷாயம் (Camphorodyne) என்கிற திராவகத்தில் எழு அல்லது எட்டுப் பொட்டுகளைத் தண்ணீரிற் கலந்து கொடுத்தால் பேதி நின்றுவிடும்.

கன்றுகளுக்குச் சாதாரணமாய் மற்றொரு நோய் வருவதுண்டு. அதாவது வயல்களிலும் வேறு ஈரமான விடங்களிலு மிருக்கிற ஒருவகைப் புழு கன்றுக்குட்டிகளின் கழுத்திலும் நாசித் துவாரங்களிலும் கடிப்பதினாலவைகளுக்கு ஒருவித இருமல் உண்டாகிறது. இந்த நோய் கண்டிருப்பதற் கின்னொரு அடையாளம் கன்றுகள் ஒரு நிலைமையில் நிற்காமலும் அடிக்கடி தலையை யசைத்துக்கொண்டு மிருக்கும். அவைகளின் நாசிகளிலும் தொண்டைகளிலும் புகையூட்டினால் இந்த நோய் நீங்கும்.

மேற்கூறியவைகளைக்காட்டிலும் கன்றுகளுக்கு மிகுந்த துன்பத்தை யுண்டாக்குவதும் சீக்கிரத்தில் நிவிர்த்தியாகாததுமான வியாதி 'ரிங்குவொர்ம்' (Ringworm) என்கிற பூச்சிக்கடி. இது அநேகமாய்க் கழுத்திலும் தலையிலும் வரும். அது முதலில் சிறு பருக்களாகக் கிளம்பிச் சிறிது சிறிதாகப் படர்ந்து மோதிரம்போ லொரு வட்டமான வடிவைக்கொள்ளும். அதை முதலிலேயே கவனிக்காம லசட்டையா யிருந்தால் அது வரவர அதிக இரணமாகி மிகுந்த நமைச்சலை யுண்டாக்கும். கன்றுக்குட்டிகள் அந்த நமைச்சலைப் பொறுக்கமுடியாமல் தூண் சுவர் முதலிய உரமான வஸ்துக்களில் சாய்ந்து அப்புண்களைத் தேய்த்துக்கொள்ளும். அவ்வாறு தேய்க்கும்பொழுது அந்தப் புண்களிலிருக்கும் கிருமிகள் அந்தத் தூண்களிலும் சுவர்களிலு மொட்டிக்கொண்டு

அவைகளில் அதேமாதிரி தேய்த்துக்கொள்ள வருகிற இதா மாடுகளின் சர்மங்களி லொட்டிக்கொள்ளும். இந்தவிதமாய் வெகு சீக்கிரத்தில் பல மாடுகளுக்கும் இந்த பூச்சிக்கடி தொற்றும். இந்த நோய்க்கு சிகிச்சை:— புண்களை நன்றாய்ச் சுத்தப் படுத்தி 'டின்சர் ஆப் ஐயோடின்' (Tincture of iodine) என்னும் திராவகத்தைப் பூசிக்கொண்டு வரவேண்டும். அநேகநாள் பொறுமையுடன் பிரயாசைப் பட்டாலொழிய இது முழுதும் நிவிர்த்தியாகாது. இதை யதிகமாய்ப் பரவச்செய்யாம விருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளுஞ் செய்யவேண்டும்.

வர்த்தமானக் குறிப்புகள்.

1. **பஞ்சரப்போல் தர்மம்.**—மஹிமை பொருந்திய நம்முடைய சக்ரவர்த்தியாருக்கு முடிசூட்டின தினம் (The world Circus) என்னும் சர்க்கஸ் கம்பெனியார் சென்னைப் பஞ்சரப்போல் நிமித்தமாக ஆடின ஆட்டத்தில் வசூலான 75 ரூபாயை அதற் குதவினார்கள். அத்தொகை அநேக வந்தனத்துடன் அங்கீகரிக்கப்பட்டதை யிதன் மூலமாய்த் தெரிவிக்கின்றோம். மெஸ்ஸர்ஸ் கிங்கு அண்டு கம்பெனியி லொருவரும் பஞ்சரப்போல் கமிட்டியைச் சேர்ந்தவருமான ம-ா-ா-ஸ்ரீ. ராவ்சாஹேப் இராமானுஜஞ் செட்டியாரவர்கள் வழக்கம்போல ஞாயிற்றுக்கிழமைகளில் பஞ்சரப்போல் ஜந்துக்களுக்குப் புல்லை இனமாய்க் கொடுப்பதுடன் சக்ரவர்த்தியாருடைய பட்டாபிஷேகத்தன்றும் அதேமாதிரி பசுக்களுக்கும் கன்றுகளுக்கும் புல் வழங்கினார்.

2. **ஜந்து விநோதக் காட்சி.**—சென்ற ஜனவரி 27-ந்தேதி சனிக்கிழமை கோட்டை ஜிம்கானா மைதானத்தில் சென்னை ஜீவ ஹிம்சை நிவாரண சங்கத்தாரால், மகிமை பொருந்திய கவர்னர் லார்ட் தாமஸ் கிப்ஸன் கார்மைகேல் பிரபு, அவருடைய பெருமாட்டி லேடி கார்மைகேல் இவர்கள் திரவிய சகாயத்தாலும் இவர்கள் முன்னிலையிலும் வருடாந்தர ஜந்துவிநோதக் காட்சி சிராய் நடத்தப்பட்டது. அப்பொழுது ஜீவகாருண்யத்துடன் நன்றாகப் போஷிக்கப்பட்ட ஜந்துக்களைக் கொண்டுவந்து காட்டினவர்களுக்கும் பந்தயங்களில் ஜயம் பெற்றவர்களுக்கும் மாமூலாய்க் கொடுக்கும் இனாம்களைத்தவிர, மாடுகளை வண்டிகளில் பூட்டுவதில் இப்பொழுது செய்வதை விடச் சுலபமானதும் சுகமானதுமான உபாயத்தைக் காட்டினவருக்கு ஒரு விசேஷ இனாமும் லேடி கார்மைகேல் பெருமாட்டியவர்கள் கையினால் அளிக்கப்பட்டது. சென்ற டிசம்பர் மாதத்தில் டில்லியில் மஹாராஜ சக்ரவர்த்தியவர்களின் தர்பார் நடந்தமையால் இக்காட்சி அம்மாதத்திலன்றி ஜனவரி மாதத்தில் நடத்தப்பட்டது.

3. **குதிரைகளைக் காப்பாற்றும் விதம்.**—குதிரைகளை வாங்கினபிறகு அவைகளைக் காப்பாற்றுவது மிகவும் அவசியமானது. அதற்காக ஜந்து தத்துவ டாக்டர் ஒருவரால் தெலுங்குப் பாஷையில் ஒரு கிரந்தமெழுதப்பட் டிருக்கிறது. அந்தக் கிரந்தத்தில் குதிரையின் வயது, சரீர தத்துவம், சீதோஷ்ணகாலங்களில் செய்யவேண்டிய சிகிச்சை, அதற்குண்டாகும் பலவித ரோகங்கள், அவற்றிற்கு மருந்துகள் முதலியவைகளைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விலை ஒரு ரூபாய். அதை வாங்க விரும்புகிறவர்கள் கிருஷ்ணா ஜில்லாவில் ஏலூர் ஆயுர்வேத சங்கத்தின் மானேஜருக்கு எழுதித் தருவிக்கலாம்.

4. **பேசுகிற நாய்.**—ஜெர்மனி தேசத்தில் ஹெர் எபர்ஸ் (Her Ebers) என்னு மொரு பிரபுவினால் வளர்க்கப்பட்டுவருகிற டான் (Don) என்னும் நாய் மனிதரைப்போலவே அதற்குக் கற்றுக்கொடுக்கிற சொற்களை உச்சரிக்கிறதாம். அதைப் பரிசோதிக்கும்பொருட்டுச் சில ஜந்து வைத்திய சாஸ்திரிகளும் மனோதத்துவ சாஸ்திரிகளும் போயிருந்தார்கள். அப்பொழுது அந்த நாய், "பசி," "ஆம்," "இல்லை," "அடை," "வேண்டும்" முதலான பல சொற்களுக்குச் சரியான ஜெர்மனிப்பாஷைப் பதங்களை வெகு நன்றாய் உச்சரித்தது. அந்த சாஸ்திரிகள் அந்த நாயை இன்னும் கவனித்து அதன் விநோதத்தைப்பற்றி விரிவாய் எழுதுவதாகக் கூறியிருக்கிறார்கள்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1912.